காதலியுடன் வாலிபர் உல்லாசமாக இருந்ததை பார்த்த

பள்ளி மாணவன் கடத்தி கொலை

■ வனப்பகுதியில் உடல் வீச்சு
■ சடலத்துடன் உறவினர்கள் மறியல்

தேன்கனிக்கோட்டை, ஜூலை 4: காதலியுடன் வாலிபர் உல்லாசமாக இருந்ததை நேரில் பார்த்த பள்ளி மாணவன் காரில் கடத்தி கொடூரமாக கொலை செய்யப்பட்டான். கொலையாளிகளை கைது செய்யக்கோரி, சடலத்துடன் உறவினர்கள் மறியலில் ஈடுபட்டதால் பரபரப்பு ஏற்பட்டது.

கிருஷ்ணகிரி மாவட்டம், அஞ்செட்டி அருகே மாவனட்டி கிராமத்தை சேர்ந்தவர் சிவராஜ் (40), சென்ட்ரிங் தொழிலாளி. இவரது மனைவி மஞ்சுளா. 2 மகன்கள், ஒரு மகள் உள்ளனர். இளைய மகன் ரோகித் (13), மாவனட்டியில் உள்ள அரசு பள்ளியில் 8ம் வகுப்பு படித்து வந்தான். நேற்று முன்தினம் மாலை, பள்ளி அருகே ரோகித் கிரிக்கெட் விளையாடி கொண்டிருந்தான். அப்போது, அதே பகுதியை சேர்ந்த 2 வாலிபர்கள், அவரை காரில் கடத்தி சென்றனர். ரோகித் கடத்தப்பட்டதை அறிந்த அவரது பெற்றோர் மற்றும் மாவனட்டி கிராம மக்கள், நேற்று முன்தினம் இரவு போலீசில் புகார் அளித்தனர். கடத்தலுக்கு பயன்படுத்தப்பட்ட கார் அங்குள்ள பெட்ரோல் பங்கில் இருந்தது. ஆனால், சிறுவனை கண்டுபிடிக்கவில்லை.

நேற்று முன்தினமே புகார் அளித்தும், சிறுவனை கண்டுபிடிக்க நடவடிக்கை எடுக்காத போலீசாரை கண்டித்து, பெற்றோர் மற்றும் கிராம மக்கள், நேற்று மதியம் அஞ்செட்டி பஸ் நிலையத்தில் சாலை மறியலில் ஈடுபட்டனர். இதனால் பஸ் நிலையத்தில் பரபரப்பு ஏற்பட்டது. தகவல் அறிந்த தேன்கனிக்கோட்டை டிஎஸ்பி ஆனந்தராஜ் மற்றும் அஞ்செட்டி போலீசார், விரைந்து வந்து பேச்சுவார்த்தை நடத்தினர். இந்நிலையில், அஞ்செட்டி கொண்டை ஊசி வளைவு பகுதியில், வனப்பகுதியில் சிறுவன் ரோகித் சடலமாக கிடப்பதாக தகவல் பரவியது. உடனடியாக அஞ்செட்டி போலீசார் மற்றும் உறவினர்கள் விரைந்து சென்றனர். அப்போது, வனப்பகுதியில் சிறுவன் வயிற்றில் கத்தியால் குத்தப்பட்டும், காலில் கத்தியால் வெட்டப்பட்டும் கொலை செய்யப்பட்டு கிடந்தான்.

இதை கண்டு அதிர்ச்சியடைந்த உறவினர்கள், அவரது சடலத்தை அஞ்செட்டி பஸ் நிலையத்திற்கு கொண்டு சென்றனர். போலீசார் நடவடிக்கை எடுக்காமல் தாமதித்ததால், சிறுவன் கொலை செய்யப்பட்டுள்ளான். அவனை கடத்தி கொலை செய்த வாலிபர்களை, உடனடியாக கைது செய்ய வேண்டும் என கூறி, சடலத்துடன் மறியலில் ஈடுபட்டனர். தகவல் அறிந்த மாவட்ட எஸ்பி தங்கதுரை, சம்பவ இடம் சென்று, அவர்களிடம் பேச்சுவார்த்தை நடத்தினார். அப்போது, நேற்று முன்தினமே புகார் அளித்தும், சிறுவனை கண்டுபிடிக்காத அஞ்செட்டி இன்ஸ்பெக்டரை சஸ்பெண்ட் செய்ய வேண்டும், சிறுவனை கடத்தி கொலை செய்த வாலிபர்களை கைது செய்ய வேண்டும் என கேட்டு வாக்குவாதம் செய்தனர்.

பின்னர், எஸ்பியின் சமரசத்தை ஏற்று மறியலை கைவிட்டனர். தொடர்ந்து, ரோகித்தின் சடலத்தை கைப்பற்றி பிரேத பரிசோதனைக்கு கிருஷ்ணகிரி அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர்.

போலீசார் நடத்திய முதல் கட்ட விசாரணையில், மாவனட்டி கிராமத்தைச் சேர்ந்த மாதேவன் (25) என்ற வாலிபர், ஒரு பெண்ணை காதலித்து வருகிறார். அந்த பெண்ணுடன் தனிமையில் உல்லாசமாக இருந்ததை, சிறுவன் ரோகித் நேரில் பார்த்து விட்டான். இதனால், வீட்டில் கூறி விடுவான் என பயந்து போன மாதேவன், கர்நாடகாவை சேர்ந்த தனது நண்பரான மாதேவா (21) என்பவருடன் சேர்ந்து, சிறுவன் ரோகித்தை காரில் கடத்தி சென்று, கொடூரமாக கொலை செய்து, உடலை வனப்பகுதியில் வீசி விட்டு சென்றுள்ளனர். இது தொடர்பாக, சிறுவன் கடத்தப்பட்ட பகுதியில் உள்ள சிசிடிவி கேமராக்களை ஆய்வு செய்த போலீசார், சிறுவனை கடத்திச் சென்ற மாதேவன், மாதேவா ஆகியோரை பிடித்து, தீவிர விசாரணை நடத்தி வருகின்றனர்.

அவிநாசி புதுப்பெண் தற்கொலை வழக்கு

கணவர், மாமனாருக்கு ஜாமீன் வழங்கக்கூடாது



► ரிதன்யாவுக்கு வரதட்சணையாக பெற்றோர் வழங்கிய நகைகள், மற்றும் மணமகனுக்கு வழங்கிய சொகுசு கார்.

திருப்பூர் நீதிமன்றத்தில் பெற்றோர் மனு

திருப்பூர், ஜூலை 4: வரதட்சணை கொடுமையால் புதுப்பெண் தற்கொலை வழக்கில் கைதான கணவர் மற்றும் மாமனாருக்கு ஜாமீன் வழங்கக்கூடாது என அப்பெண்ணின் பெற்றோர் திருப்பூர் நீதிமன்றத்தில் இடையீட்டு மனு தாக்கல் செய்தனர்.

திருப்பூர் மாவட்டம் அவிநாசி கைகாட்டிப்புதூரை சேர்ந்தவர் அண்ணாதுரை (53). பனியன் நிறுவன அதிபர். இவரது மனைவி ஜெயசுதா (42). இவர்களது ஒரே மகள் ரிதன்யா (27). எம்எஸ்சி பட்டதாரி. ரிதன்யாவுக்கும், இதே பகுதியில் உள்ள ஜெயம்கார்டனை சேர்ந்த ஈஸ்வரமூர்த்தி-சித்ராதேவி தம்பதியின் மகன் கவின்குமாருக்கும் (27) கடந்த ஏப்ரல் 11ல் திருமணம் நடைபெற்றது. இவர் கார்மெண்ட்ஸ் டிரேடிங் கம்பெனி உரிமையாளர். திருமணத்தின்போது ரிதன்யாவிற்கு 300 பவுன் நகையும், மாப்பிள்ளைக்கு ரூ.70 லட்சத்திற்கு சொகுசு காரும் வாங்கி கொடுத்ததோடு, ரூ.2.25 கோடி செலவு செய்து திருமணம் செய்து வைத்ததாக கூறப்படுகிறது.

இந்நிலையில், கடந்த மாதம் 28ம் தேதி கோயிலுக்கு செல்வதாக காரில் புறப்பட்ட ரிதன்யா கைகாட்டிப்புதூரில் காருக்குள் விஷம் குடித்து தற்கொலை செய்து கொண்டார். முன்னதாக, தனது தந்தையின் வாட்ஸ் அப்பிற்கு கதறி அழுதபடி ஆடியோ பதிவை அனுப்பியிருந்தார். அதில், 500 பவுன் நகை வரதட்சணை கேட்டதாகவும், உடல் ரீதியாகவும், மன ரீதியாகவும் ரிதன்யாவை கணவர் மற்றும் அவரது குடும்பத்தார் தொடர்ந்து சித்ரவதை செய்ததாகவும் கூறியிருந்தார். மேலும், தற்கொலைக்கு காரணம் கணவர் கவின்குமார் அவரது பெற்றோர் ஈஸ்வரமூர்த்தி-சித்ராதேவி ஆகியோர் தான் என்று கூறியிருந்தார்.

இது தொடர்பாக, சேவூர் போலீசார் வழக்குப்பதிந்து ரிதன்யாவின் கணவர் கவின்குமார், மாமனார் ஈஸ்வரமூர்த்தி ஆகியோரை கைது செய்தனர். மாமியார் சித்ராதேவி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டதால் அவரை கைது செய்யவில்லை. அதன்பின், அவர் தலைமறைவானார்.

இந்த நிலையில், இந்த வழக்கில் ரிதன்யாவின் கணவர் கவின்குமார் சார்பில் தாக்கல் செய்யப்பட்ட ஜாமீன் மனு நேற்று (3ம் தேதி) திருப்பூர் மாவட்ட முதன்மை நீதிமன்றத்தில் விசாரணைக்கு வந்தது. இந்த மனுவின் மீது இடையீட்டு மனு தாக்கல் செய்த ரிதன்யாவின் பெற்றோர், ஜாமீன் வழங்கக்கூடாது என கடும் எதிர்ப்பு தெரிவித்திருந்தனர். இதனை பதிவு செய்த நீதிபதி ஜாமீன் மனு மீது நாளை (வெள்ளிக்கிழமை) விசாரணை நடத்தப்படும் என்று அறிவித்து வழக்கை ஒத்தி வைத்தார். மனு தாக்கல் செய்ய வந்திருந்த ரிதன்யாவின் தந்தை அண்ணாதுரை தனது மகள் இறப்பிற்கு நீதி கிடைக்க வேண்டுமென நீதிமன்ற வளாகத்தில் கையெடுத்து கும்பிட்டு கண்ணீர் விட்டு அழுதார்.

மாற்றுத்திறனாளியை தாக்கிய போலீஸ்காரர் சஸ்பெண்ட்

ராமநாதபுரம், ஜூலை 4: ராமநாதபுரம் மாவட்டம், முதுகுளத்தூர் அருகே சித்திரங்குடி கிராமத்தை சேர்ந்தவர் தங்கவேல்(40). மாற்றுத்திறனாளியான இவருக்கு, செயற்கை கால் பொருத்தப்பட்டுள்ளது. பெட்டிக்கடை வைத்துள்ளார். இந்த கடைக்கு கடந்த ஜூன் 14ம் தேதி பேரையூர் போலீஸ் எஸ்பியின் தனிப்பிரிவு போலீஸ் லிங்கசாமி வந்தார். அப்போது ஏற்பட்ட வாக்குவாதத்தில் லிங்கசாமி, தங்கவேலுவை கடுமையாக தாக்கியதில் கையில் எலும்பு முறிவு ஏற்பட்டது. லிங்கசாமிக்கும் தலையில் காயம் ஏற்பட்டது. புகாரின்படி பேரையூர் போலீசார் இருவர் மீதும் வழக்குப்பதிவு செய்தனர்.

போலீஸ்காரர் லிங்கசாமியை ஜூன் 25ம் தேதி எஸ்பி சந்தீஷ் சஸ்பெண்ட் செய்த தகவல் தற்போது வெளியானது.

உச்ச நீதிமன்ற உத்தரவை பின்பற்றி சட்ட அலுவலர் நியமிக்கப்பட்டனரா?

ஐகோர்ட் கிளை கேள்வி

மதுரை ஜூலை 4: சட்ட அலுவலர் நியமனத்தில் உரிய விதிமுறைகளை பின்பற்ற கோரிய வழக்கில், உச்சநீதிமன்றம் உத்தரவை பின்பற்றி நியமனம் செய்யப்பட்டுள்ளனரா என்பது குறித்து, பதிலளிக்குமாறு ஐகோர்ட் கிளை உத்தரவிட்டுள்ளது.

மதுரை மானகிரியை சேர்ந்த வழக்கறிஞர் செல்வகுமார், ஐகோர்ட் மதுரை கிளையில் தாக்கல் செய்த மனு: ஐகோர்ட் கிளையில் தமிழக அரசு சார்பாக ஆஜராகி வாதிடுவதற்காக சட்ட அலுவலர்கள் நியமிக்கப்படுவர். இதில் குற்றவியல் மற்றும் உரிமையியல் வழக்குகள் விசாரிக்க தனித்தனியாக வழக்கறிஞர்கள் நியமிக்கப்படுவர். இவ்வாறு அரசு வழக்கறிஞர்கள் நியமனத்திற்காக தனி சட்ட விதிமுறைகள் உள்ளது. குறிப்பாக 2017ம் ஆண்டு அரசு சட்ட அலுவலர் நியமனம் விதிகள் வகுக்கப்பட்டுள்ளது. அதன் அடிப்படையில் அரசு தலைமை வழக்கறிஞர், பொதுத்துறை செயலர், சட்டத்துறை செயலர், உள்துறை செயலர் அடங்கிய குழுவை உருவாக்கி, அதன் மூலம் அரசு சட்ட அலுவலர்கள் தேர்வு செய்யப்பட வேண்டும். ஆனால் தற்போது ஐகோர்ட் கிளையில் நியமனம் செய்யப்பட்டுள்ள சட்ட அலுவலர்கள் உரிய விதிமுறைகளை பின்பற்றாமல் நியமனம் செய்யப்பட்டுள்ளனர்.

போதிய பயிற்சி, வாதாடும் திறமை இல்லாததால் வழக்குகள் தேக்கம் ஏற்படக்கூடிய சூழல் ஏற்பட்டுள்ளது. எனவே, உரிய சட்ட விதிகளை பின்பற்றி சட்ட அலுவலர்கள் நியமனம் செய்ய வேண்டும். புதிய விதிகளை பின்பற்றாமல் நடந்த நியமனத்தை ரத்து செய்து உத்தரவிட வேண்டும்.

இவ்வாறு கூறியிருந்தார்.

இந்த மனு நீதிபதிகள் எஸ்.எம்.சுப்ரமணியம், மரியா கிளெட் ஆகியோர் முன் நேற்று விசாரணைக்கு வந்தது.

அரசு தரப்பில், சட்ட அலுவலர்கள் உரிய விதிமுறைகளை பின்பற்றி தான் நியமனம் செய்யப்பட்டுள்ளார்கள் என தெரிவிக்கப்பட்டது. நீதிபதிகள், சட்ட அலுவலர் நியமனம் குறித்து உச்ச நீதிமன்றம் விரிவான உத்தரவு பிறப்பித்துள்ளது. அதனை பின்பற்றி சட்ட அலுவலர்கள் நியமனம் செய்யப்பட்டுள்ளார்களா? என கேள்வி எழுப்பினர். பின்னர், மனுவிற்கு சட்டத்துறை செயலர், உள்துறை செயலர் தரப்பில் பதில் மனு தாக்கல் செய்ய உத்தரவிட்டு விசாரணையை தள்ளி வைத்தனர்.

ஆசை வலையில் வீழ்த்தி

அரசு அதிகாரி உட்பட பலரிடம் தவெக பெண் பிரமுகர் உல்லாசம்

வீடியோ எடுத்து பல லட்சம் கேட்டு மிரட்டியதால் கைது

► கைதான ரீட்டாவின் தவெக உறுப்பினர் அட்டை.

திண்டுக்கல், ஜூலை 4: திண்டுக்கல்லில் அரசு அதிகாரி உள்பட பலருடன் உல்லாசம் அனுபவித்ததை வீடியோ எடுத்து, லட்சக்கணக்கில் பணம் கேட்டு மிரட்டிய தவெக பெண் பிரமுகரை போலீசார் கைது செய்தனர்.

திண்டுக்கல் அருகே சின்ன அய்யங்குளத்தை சேர்ந்தவர் ரீட்டா (48). தமிழக வெற்றி கழக உறுப்பினரான இவர், அக்கட்சி நிகழ்ச்சிகளில் பங்கேற்று வந்துள்ளார். இவர், திண்டுக்கல்லை சேர்ந்த 57 வயது அரசு பொதுப்பணித்துறை பொறியாளரிடம் தகாத உறவில் இருந்ததாகவும், இருவரும் அடிக்கடி தனிமையில் சந்தித்து உல்லாசம் அனுபவித்து வந்ததாகவும் கூறப்படுகிறது. உல்லாசமாக இருந்ததை வீடியோவாக பதிவு செய்த ரீட்டா, அரசு பொறியாளரிடம் அதை காட்டி அடிக்கடி பணம் பறித்துள்ளார். மேலும், லட்சக்கணக்கில் பணம் கேட்டதாகவும், தராவிட்டால் அந்தரங்க வீடியோவை குடும்பத்தினருக்கு அனுப்பி விடுவேன் என அரசு பொறியாளரை மிரட்டியதாகவும் கூறப்படுகிறது.

பொறியாளர் இது குறித்து தாடிக்கொம்பு காவல் நிலையத்தில் புகார் அளித்தார். இதன்பேரில் போலீசார் வழக்குப்பதிந்து ரீட்டாவை நேற்று முன்தினம் இரவு கைது செய்தனர். போலீசார் விசாரணையில், அரசு பொறியாளரிடம் ஆபாச வீடியோவைக் காட்டி பணம் பறித்ததை ரீட்டா ஒப்புக் கொண்டார். இதேபோல் மேலும் பலரிடம் பழகி ஆபாச வீடியோ எடுத்து பணம் பறித்ததும் தெரிய வந்துள்ளது. மேலும், அவரிடமிருந்து ரூ.30 ஆயிரத்தை போலீசார் பறிமுதல் செய்தனர். பின்னர் போலீசார், ரீட்டாவை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தி நிலக்கோட்டையில் உள்ள பெண்கள் சிறையில் அடைத்தனர். தவெக பெண் உறுப்பினர் ஆண்களை வலையில் வீழ்த்தி உல்லாசமாக இருந்து ஆபாச வீடியோ எடுத்து பணம் கேட்டு மிரட்டிய சம்பவம் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

பாஜ பிரமுகர் படுகொலை

கோபால்பட்டி, ஜூலை 4: பாஜ பிரமுகர் சரமாரியாக கத்தி மற்றும் அரிவாளால் வெட்டி படுகொலை செய்யப்பட்டுள்ளார்.



திண்டுக்கல் மாவட்டம், சாணார்பட்டி அருகே ராஜக்காபட்டி ஊராட்சி கல்லுப்பட்டியை சேர்ந்தவர் ரண்டக் பாலன் என்ற பாலகிருஷ்ணன் (47). பாஜ ஒன்றிய முன்னாள் நிர்வாகி. திருமணமாகாத இவர் பல்வேறு தொழில்கள் செய்து வந்தார். இவர் நேற்று மாலை மடூர் பிரிவு அருகே டூவீலரில் சென்றபோது அவ்வழியே 2 டூவீலர்களில் வந்த மர்மநபர்கள் இவரை வழிமறித்து கத்தி, அரிவாள் உள்ளிட்ட பயங்கர ஆயுதங்களால் சரமாரியாக வெட்டி விட்டு தப்பினர்.

இதில் அவர் சம்பவ இடத்திலேயே ரத்த வெள்ளத்தில் உயிரிழந்தார். இது குறித்து சாணார்பட்டி போலீசார் வழக்கு பதிந்து, தொழில் போட்டியால் கொலை நடந்ததா அல்லது முன்விரோதத்தால் நடந்ததா என்பது குறித்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

சங்கராபுரம் அருகே துணிகரம்

தம்பதியை கட்டிப்போட்டு தாக்கி 200 பவுன் கொள்ளை

சங்கராபுரம், ஜூலை 4: கள்ளக்குறிச்சி மாவட்டம் சங்கராபுரம் அருகே கடுவனூர் கிராமத்தில் வசிப்பவர் கேசவ வர்மன் (47). இவர் குடும்பத்துடன் துபாயில் தங்கி கடந்த 15 ஆண்டுகளாக இன்ஜினியராக வேலை செய்கிறார். இந்நிலையில் தனது 2வது மகளுக்கு மஞ்சள் நீராட்டு விழா நடத்துவதற்காக சில தினங்களுக்கு முன் சொந்த ஊரான கடுவனூர் கிராமத்திற்கு வந்துள்ளார். வரும் ஜூலை 7ம்தேதி மகளுக்கு மஞ்சள் நீராட்டு விழா நிகழ்ச்சி நடைபெற இருந்த நிலையில் குடும்பத்தினரின் பாஸ்போர்ட்டை புதுப்பிப்பதற்காக கேசவ வர்மன் மற்றும் அவரது குடும்பத்தினர் நேற்று முன்தினம் மாலை சென்னைக்கு சென்றுள்ளனர்.

வீட்டில் கேசவ வர்மனின் வயதான பெற்றோர் முனியன் (80), பொன்னம்மாள் (75) ஆகியோர் மட்டும் தனியாக இருந்துள்ளனர். இதனை நோட்டமிட்ட 4 மர்ம நபர்கள் நேற்று அதிகாலை 2 மணியளவில் முகத்தை துண்டு மற்றும் கர்ச்சிப்பால் மூடியநிலையில் வீட்டின் பின்பக்க கதவை உடைத்து உள்ளே சென்றுள்ளனர். பின்னர் முனியன் மற்றும் பொன்னம்மாள் ஆகியோரை தாக்கி, தனி அறையில் கட்டிப்போட்டு, கடந்த 1ம்தேதி வங்கி லாக்கரில் இருந்து எடுத்துவந்த நகைகள் எங்கே எனக்கூறி, பீரோ சாவியை கேட்டு மிரட்டியுள்ளனர்.

சாவியை கொடுக்க மறுக்கவே, தலையணையை எடுத்து 2 பேரின் முகத்தையும் மர்ம நபர்கள் அழுத்தவே, உயிருக்கு பயந்த தம்பதி சாவியை கொடுத்துள்ளனர். இதையடுத்து பீரோவை திறந்து, லாக்கரை உடைத்து 200 பவுன் தங்க நகைகளை கொள்ளையடித்துக் கொண்டு தப்பினர். உடனடியாக தம்பதியர், மகனுக்கு செல்போனில் தகவல் கொடுத்தனர். அவரது புகாரின்படி சங்கராபுரம் நேரில் வந்து ஆய்வு செய்தனர். மாவட்ட எஸ்பி ரஜட் சதுர்வேதியும் நேரில் விசாரணை மேற்கொண்டார். கொள்ளை போன நகைகளின் மதிப்பு ரூ.1.50 கோடி ஆகும்.

துபாயில் இருந்து சொந்த ஊர் திரும்பிய கேசவ வர்மன், கடந்த 1ம்தேதி அங்குள்ள ஒரு தனியார் வங்கியின் லாக்கரில் இருந்த 200 பவுன் நகைகளை எடுத்து வீட்டில் வைத்திருந்தது தெரிந்த நபர்களே கொள்ளையில் ஈடுபட்டுள்ளனர். எனவே சந்தேகத்தின்பேரில் சிலரை பிடித்து போலீசார் தீவிரமாக விசாரித்து வருகின்றனர்.

நெகிழி தவிர்ப்பீர் மழைநீரை சேகரிப்பீர்

திருச்சிராப்பள்ளி மாநகராட்சி

ஒப்பந்தப்புள்ளி அறிக்கை எண். 112/2025-2026

திருச்சிராப்பள்ளி மாநகராட்சி, மண்டலம் எண். 01, 03 & 04, **பொதுநிதி 2025-26ன்** கீழ், (தொகுப்பு-4) வார்டு எண். 03, 41 & 64க்குட்பட்ட பகுதிகளில் மைய சுடுகலவை இயந்திரம் மூலம் பேவர் ஃபினிஷர் உதவியுடன் தார்சாலை சீரமைக்கும் பணிகளை **ரூ.450.50 இலட்சம்** மதிப்பீட்டில் மேற்கொள்வதற்கு ஒப்பந்தப்புள்ளியில் பங்கேற்க விரும்பும் ஒப்பந்தக்காரர்கள் மின்னணு முறையில் **http://tntenders.gov.in** இணையதளத்தின் மூலமாக **24.07.2025** அன்று **மாலை 3.00** மணிக்குள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். மற்றும் நேரில் **24.07.2025 மாலை 3.00** மணிக்குள் சமர்ப்பிக்கப்படும் ஒப்பந்தப்புள்ளிகள் அன்று **மாலை 4.00** மணியளவில் திறக்கப்படும்.

மேற்கண்ட பணிகளுக்கான ஒப்பந்தப்புள்ளி நிபந்தனைகள் மேற்குறிப்பிட்டுள்ள இணையதளத்தில் உள்ளது. மேலும் விவரங்கள் அறிய மாநகராட்சி மைய அலுவலகத்தில் உள்ள பொறியியல் பிரிவில் அலுவலக நாட்களில் அலுவலக நேரத்தில் கேட்டு தெரிந்து கொள்ளலாம். எதிர்பாராதவிதமாக ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்படும் நாள் அரசு விடுமுறை தினம் என அறிவிக்கப்பட்டால் அதற்கு அடுத்த வேலை நாளில் அதே நேரத்தில் பெற்றுக்கொள்ளப்படும்.

இ2/715/2025(மையம்) **ஆணையாளர்,**
Visit us : http://www.trichycorporation.gov.in செ.ம.தொ.இ/3431/ஒப்பந்தப்புள்ளி/2025 **திருச்சிராப்பள்ளி மாநகராட்சி**

aavin **E.D.912, THE SALEM DISTRICT CO-OP. MILK PRODUCERS' UNION LTD.,**
Sithanur, Thalavaipatty, Salem- 636 302.(T.N) Office Cell : 7373704800
Telefax : 0427 - 2386871 E-mail : aavinslm@gmail.com GST No.33AAAAT3146P1ZA
NOTICE INVITING TENDER (e-Submission only)
The Salem D.C.M.P.U.Ltd., invite **TWO PART TENDERS** by the way of e-submission through e-Procurement portal from the reputed Manufacturers / Authorized Dealers for following items/Works for The Salem DCMPU Ltd., Salem under NABARD RIDF Scheme.

Sl.No.	Name of Item / Works	EMD (Rs.)
1	Installation of Automatic Milk pouch stacking and Conveyor System at Salem Dairy	2,00,000/-

Tender Document Availability:	E-Submission End Date:	Technical Bid Opening Date:
11.07.2025 to 11.08.2025 upto 2.30 PM	11.08.2025 at 2.30 PM	12.08.2025 at 03.00 PM

The Technical Bid shall be opened through online e-Procurement portal **(http://tntenders.gov.in)** on above mentioned date & address. The Bidder should submit their bids only through e-procurement portal **(http://tntenders.gov.in).** All other details can be seen in the tender documents; the tender documents can be downloaded at the above mentioned website. Corrigendum /Addendum to this publication, if any would appear only on the above said website.
DIPR/ 3382 /TENDER/2025 **GENERAL MANAGER**

பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் - 13 ம.அ.13.ந.க.எண்.சி1 / 3428 / 2025

e-மின்னனு ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு (Two Cover System)
கீழ்கண்ட பணிக்கு உதவி ஆணையர் (பொ)/ம - 13 அவர்களால் மின்னனு ஒப்பந்தப்புள்ளி கோரப்படுகிறது

2024 - 25ம் ஆண்டு தென் சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் மேம்பாட்டு நிதி மண்டலம் - 13, பகுதி - 40 வார்டு - 169ல், வெங்கடாபுரத்தில் சமுதாய நல கூடம் முதல் தளத்தில் கட்டும் பணி
பணியின் உத்தேச தொகை ரூ. 1,34,33,224.79
ஒப்ப முன் வைப்புத் தொகை ரூ. 1,34,500.00
ஒப்பம் சமர்ப்பிக்க கடைசி நாள் மற்றும் நேரம் 17.07.2025 அன்று பிற்பகல் 3.00 மணி வரை
ஒப்பம் திறக்கப்படும் நாள் மற்றும் நேரம் 18.07.2025 அன்று பிற்பகல் 3.30 மணி

செ.ம.தொ.இ / 3420 / ஒப்பந்தப்புள்ளி / 2025 **மேற்பார்வை பொறியாளர் (தெற்கு)**

TATA

டாடா கேபிடல் ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட்
பதிவு முகவரி: 11ஆவது தளம், டவர் A, பெனின்சுலா வர்த்தகப் பூங்கா, கண்பத்ராவ் கடம் மார்க், லோயர் பரேல், மும்பை – 400013.
கிளை முகவரி: டாடா கேபிடல் ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட், முதல் தளம், நூற்றாண்டு சதுக்கம், எண்.6A, டாக்டர் அம்பேத்கர் சாலை, கோடம்பாக்கம், சென்னை – 600 024.

அசையா சொத்து விற்பனை அறிவிப்பு
(கடனீட்டுச் சொத்து உரிமை (அமலாக்கம்) விதிகள் 2002–ன் விதி 8(6) மற்றும் விதி 9(1) கீழ்)
கடனீட்டுச் சொத்து உரிமை (அமலாக்கம்) விதிகள், 2002–ன் விதி 8(6) மற்றும் விதி 9(1) விதிமுறையுடன் பத்திரமயமாக்கல் மற்றும் நிதிச் சொத்துகளை மறுசீரமைத்தல் மேலும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்கம் சட்டம், 2002 கீழ் அசையாச் சொத்துகள் விற்பனை, 15 நாள் மின்–ஏலம் அறிவிப்பு

இதன்மூலம் பொதுமக்களுக்குப் பொதுவாக மேலும் கீழ்க்காணும் கடன்தாரர் மற்றும்/ உப–கடன்தாரர், அல்லது அவர்தம் சட்டப்பூர்வ வாரிசுகள்/பிரதிநிதிகள் (கடன்தாரர்கள்) ஆகியோருக்கு குறிப்பாக வழங்கப்படும் அறிவிப்பாவது, **டாடா கேபிடல் ஹவுசிங் பைனான்ஸ் லிட். (டிசிஎச்எப்எல்)** வசம் அடமானம் வைக்கப்பட்ட, டாடா கேபிடல் ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெடின் அதிகாரப்பூர்வ அதிகாரியால் சுவாதீனம் செய்யப்பட்டிருக்கும் கீழே விவரிக்கப்பட்ட அசையாச் சொத்தானது, கீழே குறிப்பிட்ட கடன்தாரர் மற்றும் உப–கடன்தாரர்களிடமிருந்து நிலுவைத்தொகைகளை மீட்பதற்காக **'உள்ளது உள்ளவிடத்தில்' & 'உள்ளது உள்ளவாறு'** மேலும் **'உள்ளது எதுவோ அது'** மற்றும் **'எந்த உத்தரவாதமும் இல்லாத'** அடிப்படையில் **22–07–2025** நாளில் விற்பனை செய்யப்பட உள்ளது. நிர்ணய விலை மற்றும் முன்வைப்புத்தொகை கீழே குறிப்பிடப்பட்டுள்ளன. இதன்மூலம் வழங்கப்படும் அறிவிப்பாவது, விற்பனை ஒத்தி வைப்பு/ விற்பனை நிறுத்தம் ஏதும் இல்லாதபட்சத்தில், மேற்கூறிய கடனீட்டுச் சொத்து/ சொத்து ஆனது மேற்கூறிய **22–07–2025 நாளில் பிற்பகல் 2.00 மணிக்கு மின்–ஏலம் மூலம் விற்பனை செய்யப்படும்.** மின்–ஏலத்தில் பங்கேற்பதற்கான முன்வைப்புத் தொகை கேட்பு வரைவோலை அடங்கிய முத்திரையிடப்பட்ட உறையானது கிளை முகவரி: டாடா கேபிடல் ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட், முதல் தளம், நூற்றாண்டு சதுக்கம், எண் 6A, டாக்டர் அம்பேத்கர் சாலை, கோடம்பாக்கம், சென்னை – 600 024 இடத்தில் **21–07–2025 அன்று மாலை 5.00 மணி வரை அல்லது அதற்கு முன்பாக டாடா கேபிடல் ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெடின்** அதிகாரப்பூர்வ அதிகாரியிடம் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.
கடனீட்டுச் சொத்து/ அசையாச் சொத்து விற்பனை இங்கே கீழே விவரிக்கப்பட்ட குறு விவரங்களின்படி 'உள்ளது உள்ளவிடத்தில் நிபந்தனையில்' ஆனதாகும்.

வ. எண்	கடன் கணக்கு எண்	கடன்தாரர்(கள்) / உப-கடன்தாரர்(கள்) சட்டப்பூர்வ வாரிசு(கள்) / சட்டப்பூர்வ பிரதிநிதி/ ஜாமீன்தாரர்(கள்) பெயர்	கோரிக்கை அறிவிப்பின்படி தொகை	நிர்ணய விலை	நிலுவைத் தொகை
1.	10022896 & TCHHF04040 00100067743	திரு.வெங்கடேசன் K திருமதி. V லஷ்மி	16–06–2025 தேதியின்படி ஒப்பந்த எண் 10022896 இன் கீழ் ரூ.87,26,428/– நிலுவை உங்களால் செலுத்தப்பட வேண்டியதாக உள்ளது. மேலும் ஒப்பந்த எண் TCHHF0404000100067743 இன் கீழ் தொகை ரூ.15,46,253/– நிலுவை உங்களால் செலுத்தப்பட வேண்டியதாக உள்ளது.	Rs. 75,00,000/- (ரூபாய் எழுபத்து ஐந்து லட்சம் மட்டும்) முன்வைப்புத் தொகை (EMD) Rs. 7,50,000/- (ரூபாய் ஏழு லட்சத்து ஐம்பதாயிரம் மட்டும்) சுவாதீன வகை : கையக	27.06.2025 தேதியின்படி ஒப்பந்த எண் TCHHF0404000100067743 இன் கீழ் தொகை ரூ.24,66,397/– ஒப்பந்த எண் 10022896 இன் கீழ் தொகை ரூ.1,34,34,953/– உங்களால் செலுத்தப்பட வேண்டியதாக உள்ளது. ஆக மொத்தம் ரூ.1,59,01,350/–

அசையா சொத்தின் விவரம்: மனை எண். 8, பழைய கதவு எண். 16, புதிய கதவு எண். 168, ரங்கராஜபுரம் பிரதான சாலை, கோடம்பாக்கம், சென்னை–600624, சர்வே எண் 90, பிளாக் எண் 39, புலியூர் கிராமத்தில் அடங்கிய பாதை உட்பட 1732.75 சதுர அடி பரப்பளவு உள்ள நிலத்தில் பாகம் பிரிக்கப்படாத பங்கு 865 சதுரடியுடன் சேர்த்து கார் நிறுத்துமிடத்துடன் தரைத்தளத்தில் சிறப்பான கட்டுமானம் உள்ள 1180 சதுர அடி பரப்பளவு அனைத்து துண்டு மற்றும் பகுதி உள்ள சொத்து. **எல்லைகள்: வடக்கில்:** டயனமிக் அபார்ட்மெண்ட்ஸ், **தெற்கில்:** S. லோகநாதனுக்கு சொந்தமான சொத்து, **கிழக்கில்:** லதீப் பாயின் சட்டப்பூர்வ வாரிசுகளுக்கு சொந்தமான கதவு எண் 168/1 சொத்து, **மேற்கில்:** முருகேசன் அவர்களின் சட்டப்பூர்வ வாரிசுகளுக்கு சொந்தமான கதவு எண் 167 இல் உள்ள சொத்து. **அளவீடு:** கிழக்கிலிருந்து மேற்காக வடக்குப் பக்கம்: 49 அடி, கிழக்கிலிருந்து மேற்காக தெற்குப் பக்கம்: 47 அடி 3 அங்குலம், வடக்கிலிருந்து தெற்காக கிழக்குப் பக்கம்: 22 அடி 6 அங்குலம், வடக்கிலிருந்து தெற்காக மேற்குப் பக்கம்: 20 அடி 1 அங்குலம். கோடம்பாக்கம் சார்–பதிவு மாவட்டம் மற்றும் சென்னை தெற்கு பதிவு மாவட்டத்திற்குள் அமைந்துள்ளது.
மூன்றாம் தரப்பினரால் டாடா கேபிட்டல் ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட்டிற்கு (Cs/104/2024) எதிரான உரிமையியல் வழக்கு சென்னை உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டு நிலுவையில் உள்ளது. இந்த விற்பனை விழக்கில் டிசிஎச்எப்எல்–க்கு எதிராக எந்த தடையுத்தரவும் பிறப்பிக்கப்படவில்லை. ஏலதாரர்கள் தங்கள் ஏலப்புள்ளியை சமர்ப்பிப்பதற்கு முன்பாக நிலுவை தொடர்பான விவரங்களை தொடர்ந்து தெரிந்து கொள்ளும்படி அறிவுறுத்தப்படுகிறார்கள். வழக்கு தொடுக்கப்பட்டதின் விளைவைப் பொருத்து ஏலம் நடைபெறும்.

ஏலத்தில், பொதுவாகப் பொதுமக்கள் தனிப்பட்டு தங்கள் ஏலப் புள்ளி(களை) சமர்ப்பிக்க வரவேற்கப்படுகின்றனர். இந்த விற்பனைத் தொடர்பாக ஏதேனும் பணியைச் செயல்படுத்திக் கொண்டிருக்கும் அலுவலர் அல்லது பிற நபர், விற்கப்படும் அசையாச் சொத்தில் ஏதேனும் உரிமையை கைப்பற்ற அல்லது கைப்பற்ற முயற்சிக்க நேரடியாக அல்லது மறைமுகமாக ஏலப்புள்ளி அளிக்கலாகாது. விற்பனையானது கடனீட்டுச்சொத்து உரிமை (அமலாக்கம்) விதிகள், 2002 இல் வரையறுக்கப்பட்ட நிபந்தனைகள் மற்றும் பின்வரும் மேற்கொண்டு நிபந்தனைகளுக்கு உட்பட்டது ஆகும்.
குறிப்பு: மின்–ஏலம் ஆனது http://bankauctions.in/ **வலைதளம் மூலம் 22–07–2025 அன்று பிற்பகல் 2.00 மணி முதல் 3.00 மணிக்குள் தலா 5 நிமிடங்கள் வரையறுக்கப்பட்ட நீட்டிப்புடன் நடைபெறும்.**
விதிமுறைகள் மற்றும் நிபந்தனை:
1. இங்கே கீழே அட்டவணையில் குறிப்பிட்டுள்ள விவரங்கள் கீழே கையொப்பமிட்டவருக்கு நன்கு தெரிந்த வரையில் தெரிவிக்கப்பட்டுள்ளன, ஆனால் கீழே கையொப்பமிட்டவர் இந்த அறிவிப்பில் ஏதேனும் பிழை, தவறான அறிக்கை அல்லது விடுபடுதலுக்கு பொறுப்பேற்கமாட்டார். ஏலப்புள்ளி தொகை, அல்லது ஏலதாரரிடம் ஏதேனும் பூசல் எழுமானால், அதிகாரப்பூர்வ அதிகாரியின் விருப்பவுரிமைக்கு உட்பட்டு அசையாச் சொத்து மீண்டும் ஒருமுறை ஏலத்திற்கு வைக்கப்படும். **2.** அசையாச்சொத்து நிர்ணயவிலைக்கு குறைவாக விற்பனை செய்யப்படமாட்டாது. **3.** ஏலம் உயர்த்தும் தொகைரூ.**10,000/–** (ரூபாய் பத்தாயிரம் மட்டும்) ஆகும். **4.** சொத்து கொள்முதலுக்காக சமர்ப்பிக்கப்படும் அனைத்து ஏலப்புள்ளிகளும் கிளை முகவரியில் மாற்றத்தக்க வகையில் **"டாடா கேபிடல் ஹவுசிங் பைனான்ஸ் லிட்."** பெயரிலான கேட்பு வரைவோலை மூலம் மேற்குறிப்பிட்டவாறான முன்வைப்புத் தொகையால் இணைக்கப்பட்டிருக்கப்பட வேண்டும். வெற்றிபெறாத ஏலதாரர்களுக்கு ஏலம் முடிந்த பிறகு கேட்பு வரைவோலைகள் திருப்பியளிக்கப்படும். NEFT/RTGS/IMPS வழியே முன்வைப்புத்தொகைச் செலுத்துவதற்கு, அதிகாரப்பூர்வ அதிகாரியை தொடர்பு கொள்ளவும். **5.** உயர்ந்தபட்ச ஏலதாரர், ஏலப்புள்ளி அளிக்க அவர் எப்போதும் சட்டப்பூர்வத் தகுதியடைந்தவர். மேலும் ஏலப்புள்ளித் தொகை நிர்ணய விலைக்குக் குறைவில்லாதது என்பதைப் பொறுத்து வெற்றிகர ஏலதாரராக அறிவிக்கப்படுவார். அளிக்கப்பட்ட விலை பற்றாக்குறை என தெளிவாகக் காணப்படுகையில் உயர்ந்தபட்ச ஏலப்புள்ளியை ஏற்க மறுப்பது அதிகாரப்பூர்வ அதிகாரியின் விருப்பவுரிமை முடிவிலானது ஆகும். **6.** ஏதேனும் காரணம் தொடர்பாக, விற்பனையை ஒத்தி வைத்தல் / நிறுத்துதல் என்பது அதிகாரப்பூர்வ அதிகாரியின் விருப்பவுரிமை முடிவிலானது ஆகும். **7. முன் அனுமதியின்பேரில் 11–07–2025 அன்று காலை 11 மணி முதல் மாலை 5.00 மணிக்குள் அசையாச் சொத்தினை பார்வையிடலாம். 8.** வெற்றிகர ஏலதாரராக அறிவிக்கப்பட்ட நபர், இவ்வித அறிவிப்புக்குப் பிறகு உடனடியாக, 24 மணி நேரத்திற்குள் அதிகாரப்பூர்வ அதிகாரியிடம் முன்வைப்புத் தொகை உள்ளடக்கமாக கொள்முதல் பணம்/ ஏலப்புள்ளித் தொகையின் இருபத்தைந்து சதவீதத்தைச் செலுத்த வேண்டும் மேலும் இவ்விதம் செலுத்தத் தவறினால், சொத்து உடனடியாக புதிதாக ஏலத்திற்கு வைக்கப்படும் / தனி ஒப்பந்தம் மூலம் விற்கப்படும். **9.** மேற்கூறியவாறு முதற்கட்டத் தொகைச் செலுத்தப்பட்டுவிட்டால், செலுத்த வேண்டிய கொள்முதல் பணத்தின் மீதித்தொகையானது சொத்து விற்பனை உறுதியான தேதியிலிருந்து, இந்த நாளை தவிர்த்து, 15ஆம் நாளில் அல்லது அதற்கு முன்பாக, அல்லது 15ஆவது நாள் ஞாயிற்றுக்கிழமை அல்லது பிற விடுமுறையாக அமைந்தால், 15 ஆவது நாளுக்குப் பிந்தைய முதல் அலுவலக நாளில் அதிகாரப்பூர்வ அதிகாரியிடம் கொள்முதலாளரால் செலுத்தப்பட வேண்டும். **10.** மேற்குறிப்பிட்ட காலத்திற்குள் பணப்பட்டுவாடாச் செய்யத் தவறும்பட்சத்தில், சொத்து புதிதாக ஏலத்துக்கு வைக்கப்படும்/ தனி ஒப்பந்தம் மூலம் விற்கப்படும். முன்வைப்புத்தொகை உட்பட செலுத்தியத் தொகை டாடா கேபிடல் ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட் மூலம் கைக்கொள்ளப்படும். மேலும் தவறும் கொள்முதலாளர் சொத்துக்குரிய அனைத்து கோருரிமைகளையும் இழப்பார். **11.** சொத்துக்கு உட்பட்ட, டாடா கேபிடல் ஹவுசிங் பைனான்ஸ் லிட்.–க்கு தெரிந்த, ஏதேனும் வில்லங்கங்களின் விவரங்கள்: மேற்கூறிய அட்டவணைப்படி. திட்டமிடும் ஏலதாரர் சொத்துவரி, மின்கட்டணம் ஏனைய சட்டப்பூர்வ பொறுப்பு நிலுவைகள் உட்பட சொத்து மீதான வில்லங்கங்கள் குறித்து தங்கள் சொந்த தனி விசாரணைகளை மேற்கொள்ளுமாறு அறிவுறுத்தப்படுகிறார். **12. அனைத்து பிற விவரங்களுக்கு அல்லது மின்–ஏலம் மீதான இயங்குதள பயிற்சி நடைமுறைக்கு, எதிர்நோக்கும் ஏலதாரர்கள் சேவை வழங்குநர், M/s.4குளோசர், பிளாக் எண்.605ஏ, 6ஆவது தளம், மைத்ரிவனம் கமர்ஷியல் காம்ப்ளெக்ஸ், அமீர்பேட், ஹைதராபாத்–500038 மின்னஞ்சல் : info@bankauctions.in அல்லது மணீஷ் பன்சால், மின்னஞ்சல் முகவரி Manish.Bansal@tatacapital.com அதிகாரப்பூர்வ அதிகாரி கைபேசி எண் 8588983696 தொடர்பு கொள்ளலாம். உங்கள் விசாரணையை வாட்ஸ்அப் எண் – 9999078669–க்கு அனுப்பவும். 13.** உயர்ந்தபட்சமாக அறிவிக்கப்பட்ட ஏலத்தொகை மீது 1% மூலத்தில் வரி பிடித்தம் பொருந்தும். மேலும் அது உயர்ந்தபட்ச ஏலதாரரால் செலுத்தப்பட வேண்டும். பணப்பட்டுவாடா ஆனது உரிமையாளர்/ கடன்தாரர்(கள்) பான் எண்ணில் செலுத்தப்பட வேண்டும். மேலும் சலான் நகல் பிரதி எங்கள் நிறுவனத்திடம் சமர்ப்பிக்கப்படவேண்டும். **14.** மேற்கூறிய விவரங்களுக்கு கீழ்க்காணும் கடனீட்டுக் கடனீந்தோரின் இணையதளத்தில் கொடுக்கப்பட்ட இணைப்பை படிக்கவும் :https://surl.li/cttbim **15.** மேலும்: https://www.tatacapital.com/property–disposal.html இணைப்பையும் காண்க.
கவனத்தில் கொள்க:– டாடா கேபிடல் ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட் ஆனது இந்த சொத்து விற்பனை / ஏலத்துக்காக குறிப்பிட்டுள்ள ஏலம் விடும் கூட்டுதாரரைத் தவிர ஏதேனும் தரகர்/ முகவரை நியமிக்கவில்லை. விருப்பமுள்ள நபர்கள் இது சம்பந்தமாக அனைத்து சந்தேகங்கள் மற்றும் விசாரணைக்கு கீழே கையொப்பமிட்டவர் அல்லது அதிகாரப்பூர்வ அதிகாரியை மட்டும் தொடர்பு கொள்ள வேண்டும்.

இடம்: தமிழ்நாடு ஒம்/– அதிகாரப்பூர்வ அதிகாரி,
தேதி: 04.07.2025 டாடா கேபிடல் ஹவுசிங் பைனான்ஸ் லிட்.